# Kalingathu Parani – கலிங்கத்துப்பரணி

## நூற்குறிப்பு

| | |
|---|---|
| நூல் | கலிகத்துப்பரணி |
| பாடல் வகை | கலித்தாழிழை |
| பாடல் எண்ணிக்கை | 599 தாழிசைகள் |
| ஆசிரியர் | செயங்கொண்டார் |

- 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பரணி வகையைச் சாரந்த நூல்
- இதுவே தமிழில் முதன்முதலில் எழுந்த பரணி நூல்.
- போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் புகழந்து பாடும் இலக்கியம் பரணி ஆகும்.
- முதல் குலோத்துங்கனின் )1078 – 1118) கலிங்க வெற்றியைப் பாடும் நூல்
- ஆசிரியர் கவிச்சக்கரவர்த்தி எனப் பாரட்டப்படும் : ஜெயங்கொண்டார். சோழனின் அவைக்களப்புலவர்
- சந்தநயம் பொருந்திய 599 பாடல்களைக் கொண்டது.
- வடங்கர் குலவேந்தன் அனந்தவர்மன் (அனந்தபத்மன் கலிங்கத்தை ( .ஆண்ட மன்னன்
- இவன் திறை செலுத்தாததால் குலோத்துங்கன் படையெடுத்தான்.
- சோழர் படைக்குத் தலைமை தாங்கிச் சென்றவன் கருணாகரத் தொண்டைமான்.
- 13 பகுதிகளைக் கொண்டது.

| | |
|---|---|
| 1. கடவுள் வாழ்த்து | குலோத்தங்கன் நீடூழி வாழ இறைவனை வாழ்த்தி வணங்கும் பகுதி |
| 2. கடை திறப்பு | ஊடல் நீங்கி கதவுகளைத் திறக்கப் பெண்களை வேண்டும் பகுதி |
| 3. காடு பாடியது | பாலை நில வெப்பக் கொடுமையைப் பாடிய பகுதி |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| 4. கோயில் பாடியது | பாலை நிலத்தில் அமைந்திருக்கும் காளிதேவியின் கோயிலைப் பாடிய பகுதி |
| 5. தேவியைப் பாடியது | காளிதேவியின் தோற்றத்தை அடி முதல் முடி வரை வருணிக்கும் பகுதி |
| 6. பேய்களை பாடியது | பேய்களைப் பற்றிய வருணனைப் பகுதி |
| 7. இந்திரசாலம் | ஒரு முதிய பேய் தேவி முன் இந்திரசால வித்தைகளைச் செய்த காட்டும் பகுதி |
| 8. இராச பாரம்பரியம் | குலோத்துங்கனின் குல முன்னோர்கள் பற்றிக் கூறும் பகுதி |
| 9. பேய்முறைப்பாடு | பசிக்கொடுமை தாங்காமல் பேய்கள் தேவியிடம் முறையிடும் பகுதி |
| 10. அவதாரம் | குலோத்துங்கன் அவதரித்த சிறப்பைக் கூறும் பகுதி |
| 11. காளிக்குக் கூளி கூறியது | கலிங்கப்போரை நேரில் பார்த்து வந்த கூளி , அப்போர் பற்றிக் காளிதேவிக்குக் கூறிய பகுதி |
| 12. போர் பாடியது | கலிங்கப்போர் பற்றிக் கூறும் பகுதி |
| 13. களம் பாடியது | கலிங்கப்போரை எடுத்துரைத்த பேய் போர்களத்தை நேரில் சென்று காணும்படி காளிதேவியை வேண்டியது. |

- இப்பதின்மூன்றில் கடவுள் வாழ்த்து , கடைதிறப்பு, இராசபாரம்பரியம், அவதாரம் என்ற நான்கு பகுதி தவிர மற்ற ஒன்பது பகுதியும் போர் வருணனைகளே ஆகும்.
- “பரணிக்கோர் ஜெயங்கொண்டார்” என பலட்டடை சொக்கநாதப்புலவர் பாராட்டுகிறார்.
- இந்நூலைத் “தென்தமிழ்த் தெய்வப்பரணி” என்று ஒட்டக்கூத்தர் பாராட்டியுள்ளார்.


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- குலோத்துங்கள் இதன் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு தங்கத் தேங்காயை பரிசாக அளித்தான்.
- இசை ஆயிரம், உலா, மடல் போன்ற நூல்களையும் ஜெயங்கொண்டார் பாடியுள்ளார்.

| |
|---|
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற<br>மான வனுக்க வருப்பது பரணி<br><br>– பன்னிரு பாட்டியல் நூற்பா |

- தோற்றோரின் நாட்டின் பெயரால் பாடுவது – பரணி

## *மேற்கோள்*

| |
|---|
| தீயின் வாயின்நீர் பெறினும் உண்பதோர்<br>சிந்தை கூட வாய்வெந்த உலர்ந்து, செந்<br><br>நாயின் வாயின்நீர் தன்னை நீரெனா<br><br>நவ்வி நாவினால் நக்கி விக்குமா |
| நாயின் வாய்நீரை நீர் என மான் நக்கும் எனப் பாலை நிலத்துக் கொடுமையை கூறுகிறது.<br><br>“காடுஇதனைக் கடத்தும் எனக் கருமுகிலும்<br><br>வெண்மதியும் கடக்க அப்பால்<br>ஒடிஇளைத்து உடல்வியர்த்த வியர்வுஅன்றோ<br>உருபுனலும் பனியும் அம்மா”<br>என்பது பாலை நிலத்து வழியாகக் கடந்து சென்ற கருமுகிலும் நிலவும் வெப்பம் தாங்காது ஓட முகிலிலிருந்த வடியும் வேர்வை மழையாகவும் , நிலவின் வேர்வை பனியாகவும் பொழிகிறது என்று பாலையின் கொடுமையைக் கூறுகிறது. |
| “பொருதடக்கை வாள்எங்கே மணிமார்பெங்கே<br><br>போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத”<br><br>பருவயிரத்தோள் எங்கே எங்கே என்று<br><br>பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்காண்மின்”<br><br>– இது போர்களக் காட்சியைப் பாடுகிறது |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கப்பட்டுள்ளது

“விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல”

www.tnpscgroup4.in


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in